இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 273 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – சித்திரை 31 – ஞாயிற்றுக்கிழமை 14 மே 2023 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 273: Thiruvalluvar Year - 2054 - Chithirai 31 - Sunday 14 May 2023 - Madurai 10 Pages ₹ 5.00


## கர்நாடக சட்டமன்றத் தேர்தல்:

# காங்கிரஸ் மகத்தான வெற்றி!

## சோனியா காந்தி – ராகுல் காந்தி – கார்கேவுக்கு தொலைபேசியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

பெங்களூரு, மே 14-

**கர்நாடக சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியுள்ளது. ஆளுங்கட்சியாக இருந்த பா.ஜ.க.வின் மூத்த தலைவர்கள், அமைச்சர்கள் பெரும்பாலோர் படுதோல்வியை தழுவியுள்ளனர்.**

கர்நாடக மாநில சட்டப்பேரவைத் தேர்தல், மே 10 அன்று 224 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக நடைபெற்றது. காலை 7 மணிக்குத் துவங்கி, மாலை 6 மணி வரை நடைபெற்ற இந்த வாக்குப்பதிவில், மொத்தம் 73.19 சதவிகித வாக்குகள் பதிவாகின. கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் 72.36 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்த நிலையில், இந்த முறை 0.31 சதவிகிதம் அளவிற்கு கூடுதல் வாக்குகள் பதிவாகின. மொத்தம் 5 கோடியே 30 லட்சத்து 85 ஆயிரத்து 566 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த நிலையில், அதில் 3 கோடியே 88 லட்சத்து 51 ஆயிரத்து 807 பேர் வாக்களித்தனர். இவர்களில் ஆண் வாக்காளர்கள் ஒரு கோடியே 96 லட்சத்து 58 ஆயிரத்து 398 பேரும் (73.68 சதவிகிதம்), பெண் வாக்காளர்கள் ஒரு கோடியே 91 லட்சத்து 92 ஆயிரத்து 372 பேரும் (72.70 சதவிகிதம்), மூன்றாம் பாலினத்தவர்கள் ஆயிரத்து 37 பேரும் (21.05 சதவிகிதம்) தங்களின் வாக்குகளைப் பதிவு செய்தனர்.

இந்நிலையில், 224 தொகுதிகளிலும் பதிவான வாக்குகள், மாநிலம் முழுவதும் 34 மையங்களில் நடைபெற்றது.



அதாவது ஒரு மாவட்டத்திற்கு ஒரு மையம் என்ற அளவில் வாக்கு எண்ணிக்கை மையங்கள் அமைக்கப்பட்டன.

வாக்கு எண்ணும் மையங்களில் மூன்றடுக்குப் பாதுகாப்பு போடப்பட்டது. கண்காணிப்புக் கேமிராக்களும் பொருத்தப்பட்டிருந்தன. காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை துவங்கியது.

## பா.ஜ.க. அமைச்சர்கள் படுதோல்வி!

வாக்கு எண்ணிக்கையில் ஆரம்பம் முதலே காங்கிரஸ் கட்சி முன்னிலை பெற்றிருந்தது. பெரும்பாலான தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கை முடிவடைந்துள்ள நிலையில் காங்கிரஸ் கட்சி 136 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும்பான்மை பலம் பெற்றுள்ளது. ஆளும் பாரதீய ஜனதாக்கட்சி 64 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. அங்கு மூன்றாவது பெரிய கட்சியான மதசார்பற்ற ஜனதாதளம் 20 இடங்களையும் இதர கட்சிகள் 4 தொகுதிகளையும் பிடித்துள்ளன. ஆட்சி அமைக்க 113 இடங்கள் தேவை என்ற நிலையில் காங்கிரசுக்கு 136 இடங்கள் கிடைத்துள்ளதால் அக்கட்சி தனித்து ஆட்சி அமைக்கும் பலத்தை பெற்றுள்ளது. காங்கிரஸ் சார்பில் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் அனைவரையும் உடனடியாக பெங்களூரு வரும்படி அக்கட்சித்தலைமை உத்தரவிட்டுள்ளது. புதிய முதலமைச்சரை தேர்ந்தெடுப்பதற்காக காங்கிரஸ் கட்சியின் எம்.எல்.ஏக்கள் கூட்டம் இன்று நடைபெறும் என்று தெரிகிறது.

**கர்நாடகாவில் காங்கிரஸ் தனித்து ஆட்சி அமைக்கிறது!**

மொத்த தொகுதிகள் 224

காங்கிரஸ் 136

பா.ஜ.க. 64

மதச்சார்பற்ற ஜனதா தளம் 20

மற்றவை 4

காங். எம்.எல்.ஏக்கள் அனைவரையும் உடனே பெங்களூரு வருமாறு கட்சித்தலைமை உத்தரவு புதிய முதலமைச்சரை தேர்வு செய்ய இன்று காங். எம்.எல்.ஏக்கள் கூட்டம்.

**சித்தராமையா - டி.கே.சிவகுமார் வெற்றி!**

காங்கிரஸ் கட்சியின் கர்நாடக மாநிலத் தலைவர் டி.கே. சிவக்குமார் கனகபுரா தொகுதியில் சுமார் ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். பெல்லாரி மாவட்டம் கூட்லகி தொகுதியில் டாக்டர் சீனிவாஸ், சித்ரதுர்கா மாவட்டம் செல்லக்கரே தொகுதியில் ரகுமூர்த்தி, சிவாஜி நகர் தொகுதியில்ட ரிஸ்வான் அர்ஷத் ஆகியோர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளனர்

வருணா தொகுதியில் காங்கிரஸ்கட்சிவேட்பாளர் சித்தராமையா தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார். சிட்டாபூர் தொகுதியில் பிரியங்க் கார்கே, காந்தி நகர் தொகுதியில் தினேஷ் குண்டுராவ் ஆகியோர் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றனர்.

கர்நாடகா சட்டப்பேரவை தேர்தலில் 136 தொகுதிகளில் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ள நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

### கர்நாடகா சட்டசபை தேர்தல் 2023

மொத்த தொகுதிகள் 224- பெரும்பான்மை 113

| கூட்டணி | 2018 | 2023 | மாற்றம் |
|---|---|---|---|
| காங்கிரஸ் | 80 | 136 | 56 |
| பா.ஜ.க | 104 | 64 | -40 |
| ம.ஜ.த | 37 | 20 | -17 |
| மற்றவை | 3 | 4 | 1 |

**முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் வாழ்த்து!**

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, ராகுல்காந்திக்கும் தொலைபேசி மூலம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்தார்.

மேலும், கர்நாடகா காங்கிரஸ் மாநிலத் தலைவர் டி.கே.சிவக்குமார், சித்தராமையா ஆகியோருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

---

## ஜனநாயகம் வென்றுள்ளது!

### ராகுல் காந்தி பேட்டி!



புதுடெல்லி, மே 14 -

கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மைக்கு தேவையான இடங்களை தாண்டி முன்னிலையில் உள்ளது.

224 சட்டமன்ற தொகுதிகளைக் கொண்ட கர்நாடகாவில் பெரும்பான்மைக்கு 113 இடங்களில் வெற்றி பெற வேண்டும் என்ற நிலையில் காங்கிரஸ் 136 இடங்களில் வெற்றி முகத்தில் உள்ளது. பாஜக 64 இடங்களில் மட்டுமே முன்னிலை பெற்றுள்ளது.

தேர்தல் வெற்றியால் காங்கிரஸ் கட்சி உற்சாகம் கண்டுள்ளது. காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

கர்நாடக மக்களுக்கு இதயத்தில் இருந்து நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கர்நாடக தேர்தலில் வெற்றிக்கு பாடுபட்ட கட்சித்தலைவர்களுக்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கர்நாடக தேர்தலில் ஏழை மக்களின் சக்தி வெற்றி பெற்றுள்ளது' என்றார்.

---

### திராவிட நிலப்பரப்பிலிருந்து முற்றிலுமாக அகற்றப்பட்டு

## பா.ஜ.க.வின் பழிவாங்கும் அரசியலுக்கு பாடம் புகட்டப்பட்டுள்ளது!

### கர்நாடக மாநில தேர்தல் முடிவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து!

சென்னை, மே 14–

“திராவிட நிலப்பரப்பிலிருந்து பா.ஜ.க. முற்றிலுமாக அகற்றப்பட்டு பழிவாங்கும் அரசியலுக்கு தக்க பாடம் புகட்டப்பட்டுள்ளது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கர்நாடக மாநில தேர்தல் முடிவுகள் குறித்து கருத்துத் தெரிவித்துள்ளார்.

கர்நாடக சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியுள்ளது. ஆளுங்கட்சியாக இருந்த பா.ஜ.க.வின் மூத்த தலைவர்கள், அமைச்சர்கள் பெரும்பாலோர் படுதோல்வியை தழுவியுள்ளனர்.

வாக்கு எண்ணிக்கையில் ஆரம்பம் முதலே காங்கிரஸ் கட்சி முன்னிலை பெற்றிருந்தது. பெரும்பாலான தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கை முடிவடைந்துள்ள நிலையில் காங்கிரஸ் கட்சி 136 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும்பான்மை பலம் பெற்றுள்ளது.

ஆட்சி அமைக்க 113 இடங்கள் தேவை என்ற நிலையில் காங்கிரசுக்கு 136 இடங்கள் கிடைத்துள்ளதால் கர்நாடகாவில் அக்கட்சி தனித்து ஆட்சி அமைக்கிறது.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது:–

**கர்நாடகத்தில் மிகச் சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சிக்கு எனது வாழ்த்துகள். கர்நாடக மக்கள் வாக்களித்தபோது, நியாயப்படுத்த முடியாத வகையில் சகோதரர் ராகுல் காந்தி அவர்களை நாடாளுமன்றத்தில் இருந்து பதவிநீக்கம் செய்தது, நாட்டின் முதன்மைப் புலனாய்வு அமைப்புகளை எதிர்க்கட்சிகளுக்கு எதிராகத் தவறாகப் பயன்படுத்தியது, இந்தித் திணிப்பு, பெருமளவிலான ஊழல் என அனைத்தும் அவர்கள் மனதில் எதிரொலித்திருக்கிறது.**

**பா.ஜ.க.வின் பழிவாங்கும் அரசியலுக்குத் தக்க பாடம் புகட்டி அவர்கள் தங்கள் கன்னடிகப் பெருமிதத்தை நிலைநிறுத்தியுள்ளனர். திராவிட நிலப்பரப்பில் இருந்து பா.ஜ.க. முற்றிலுமாக அகற்றப்பட்டுள்ளது.**

**அடுத்து, 2024 பொதுத்தேர்தலிலும் வெல்ல நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம்! இந்தியாவில் மக்களாட்சியையும், அரசியலமைப்பு விழுமியங்களையும் மீட்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

---

### தமிழ்நாட்டின் 3 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, மே 14 -

வங்கக்கடலில் நிலைகொண்டிருக்கும் மோக்கா புயல் அதி தீவிர புயலாக வலுப்பெற்றுள்ள நிலையில், இன்று வங்காள தேசம் வடக்கு மியான்மர் இடையே கரையை கடக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தமிழகத்தின் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாக வானிலை மையம் தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் கன்னியாகுமரி, நெல்லை, தென்காசி ஆகிய 3 மாவட்டங்களில் அடுத்த 3 மணி நேரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தகவல் தெரிவித்து உள்ளது.